

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் ஏ.பி.நந்தகுமார் கிழக்கு ஒன்றியம் கந்தனேரி ஊராட்சி கிராமத்தில் திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்து கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் கோ.குமரபாண்டியன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தலைக்கு மேல் தொங்கிய கத்தி கழுத்துக்கு வந்துவிட்டது!

# ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள்வீர்!

### நாடாளுமன்ற கழக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, ஏப். 17–

"தலைக்கு மேல் தொங்கிய கத்தி கழுத்துக்கு வந்துவிட்டது. எனவே அனைத்து அரசியல் கட்சியினரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள வேண்டும்'' என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாடாளுமன்ற கழக உறுப்பினர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

**தலைக்கு மேல் தொங்கிய கத்தி கழுத்துக்கு வந்துவிட்டது!**

**நாடு முழுக்க உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்து இந்த பேராபத்தை எதிர்கொள்வதற்கான வியூகங்கள் குறித்து கழக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசித்துள்ளேன்.**

**தனிப்பட்ட மனிதர்கள் அரசியல் இயக்கங்களைவிட, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுதான் நமது தலையாய கடமை.**

**எனவே, அனைத்து அரசியல் இயக்கங்களைச் சார்ந்த தோழர்களும் - நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள வேண்டும் என அழைக்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### பெண்கள் முன்னேற்றத்துக்காக தி.மு.க.அரசு செயல்படுகிறது:

# காட்பாடி தொகுதி மக்கள் எனக்கு உறுதுணையாக உள்ளனர்!

### தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் துரைமுருகன் நெகிழ்ச்சி!

*வேலூர், ஏப். 17 -*

பெண்கள் முன்னேற்றத்துக்காக தி.மு.க. அரசு செயல்படுகிறது என்றும் காட்பாடி தொகுதி மக்கள் எனக்கு உறுதுணையாக உள்ளனர் என்றும் தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

சட்டமன்ற தேர்தலையொட்டி காட்பாடி சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் நீர்வளத்துறை அமைச்சர்கழக பொதுச் செயலாளர் துரைமுருகன்

அவர்கள்உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார். அவர் ஒவ்வொரு பகுதியாக சென்று மக்களை சந்தித்து வாக்குகளை சேகரித்து வருகிறார்.

தி.மு.க. அரசு செய்த திட்டங்கள், அறிவித்துள்ள வாக்குறுதிகள், காட்பாடி சட்டமன்ற தொகுதி வளர்ச்சிக்கு அவர் செய்த பணிகளை எடுத்துக்கூறி பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்தநிலையில் காட்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஈஸ்வரன் கோவில் தெரு, கிளித்தான் பட்டறை, செங்குட்டை, அக்ரஹாரம், பள்ளிகுப்பம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு சென்று பிரசாரத்தில் ஈடுபட்டார். செல்லும் வழியெங்கும் அவருக்கு மக்கள், தொண்டர்கள், பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரச்சாரத்தின் போது அவர் பேசியதாவது:

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டபோது, ஒவ்வொரு வீட்டையும் அடித்துக் கொண்டிருந்தார்கள் அப்போது என் வீட்டுக்கு ஒரு தக்க துணையாக இருந்தது இந்த அக்ரஹாரத்தில் இருக்கிறவர்கள் தான். அதை நான் நினைவிலே வைத்திருக்கிறேன். எனவே இது எனது தாய் வீடு மாதிரி. அன்றில் இருந்து இன்று வரை எனக்கு உறுதுணையாக இருந்து வாக்களித்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தேர்தல் ஒரு முக்கியமான தேர்தல். மத்தியில் இருக்கிற மோடி அரசு, நம்முடைய அரசை நொண்டி அரசாக மாற்றிவிட்டு அவர் வீறுநடை போடப் பார்க்கிறார். நாடாளுமன்றத்தினுடைய பலத்தை உயர்த்திவிட்டு, உத்திரப் பிரதேசத்திற்கு மட்டும் அதிகமான சீட்டு கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கெல்லாம் குறைவாகக் கொடுத்திருக்கிறார். ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால் எல்லா மாநிலங்களும் சேர்ந்து ஓட்டுப் போட்டால் கூட உத்திரப்பிரதேசத்து தீர்மானத்தை நாம் தோற்கடிக்க முடியாது. அந்த அளவிற்கு ஜனநாயகத்தைக் கெடுக்கிற ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார். அதற்காகத்தான் நம்முடைய முதல்அமைச்சர் கருப்பு பேட்ஜ் அணிய வேண்டும் என்றும், வீட்டில் கருப்புக் கொடி ஏற்ற வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார்.

அந்த கொடியை ஏற்றுவதற்கு நம்முடைய தோழர்கள் எல்லாம் முந்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன். முதலமைச்சர் சொன்னால் அதை உடனடியாகச் செய்யக் கூடிய ஆற்றல் தி.மு.க.காரர்களுக்கு மட்டும்தான் உண்டு. இன்னொரு பக்கம் தேர்தல் நடக்கிறது. இந்தத் தேர்தல் நடப்பது ஒரு வித்தியாசமானதாக இருக்கிறது. இந்தத் தேர்தலில் எது முக்கியம், எது தேவையானது என்று மத்திய அரசு அறிவிக்கவில்லை. ஆனால் இடையிலே பல சங்கடங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் முதலமைச்சர் அது குறித்து முன்னெச்ச ரிக்கை நடவடிக்கை எடுக்கிறார்.

அதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். பெண்களுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்பதில் மிக கவனமாக இருக்கிறார். அவர் அப்பாவைப் போன்று, ஆட்சிக்கு வந்தவுடன் முதல் கையெழுத்தாக, தமிழ்நாட்டுப் பெண்கள் தமிழக அரசு பஸ்களில் எந்த ஊருக்கு வேண்டுமானா

லும் இலவசமாக போகலாம் என்று உத்தரவு போட்டார். அந்த உத்தரவு ஏழை பெண்களுக்கு உதவியாக இருந்தது. அதைத் தொடர்ந்து காலை உணவு திட்டத்தை கொண்டு வந்தார். ஒரு குடும்பத்தில் தாய்மார்களுக்கு மகளிர் உரிமைத்தொகை, அந்த குடும்பத்தை சேர்ந்த படிக்கும் பெண்களுக்கும், மாணவர்களுக்கும் கல்வி உதவித்தொகை கொடுக்கிறார். தேர்தலில் வெற்றி பெற்றால் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது.

கடந்த மாதம் கூட உங்களுக்கு உரிமைத்தொகை ரூ.5 ஆயிரமாக வழங்கினார். தேர்தலில் வெற்றி பெற்ற உடன் ரூ.8 ஆயிரம் கூப்பனும் வழங்கப்படும். நீங்கள் உங்களுக்கு பிடித்த கடையிலேயே தேவையான பொருட்களை வாங்கிக்கொள்ளலாம்.

தி.மு.க.அரசு பெண்கள் முன்னேற்றத்துக்காக செயல்படுகிறது. இத்தேர்தலில் அனைவரும் உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

உடன் மண்டல குழு தலைவர் புஷ்பலதா, பகுதி செயலாளர் ஜி.வன்னியராஜா, மாமன்ற உறுப்பினர் ரவிக்குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் பிலீப் மற்றும் கவுன்சிலர்கள், நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

### (11வது பட்டியல்)

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்க்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின்பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| விராலிமலை | – பி.டி.அரசகுமார்<br>ஆர்.ராஜசேகர் |
| சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி | – பி.கே.பாபு |
| அரக்கோணம் | – பொள்ளாச்சி மா.உமாபதி |

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப் பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 14.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



# தி.மு.க. இளைஞர் அணி

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். திருப்பூர், கோவை, நீலகிரி மாவட்டங்களில் அவர் இன்று (17–04–2026) மேற்கொள்ளவுள்ள பரப்புரை சுற்றுப்பயண விவரம் வருமாறு:

**17.4.2026 வெள்ளிக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | காங்கேயம் | பேருந்து நிலையம் அருகில், காங்கேயம். |
| காலை 10.30 மணி | உடுமலைப்பேட்டை | புதிய பேருந்து நிலையம் அருகில், வெங்கடகிருஷ்ணா வீதி, உடுமலைப்பேட்டை. |
| காலை 11.30 மணி | உடுமலைப்பேட்டை | ஊஞ்சவேலம்பட்டி, பொள்ளாச்சி. |
| மாலை 3.30 மணி | கிணத்துக்கடவு | நான்கு வழிச்சாலை சந்திப்பு, மலுமிச்சம்பட்டி. |
| மாலை 4.30 மணி | கிணத்துக்கடவு | பேருந்து நிலையம் அருகில், வெள்ளலூர். |
| மாலை 5.30 மணி | கோவை தெற்கு | வி.கே.கே.மேனன் சாலை, காந்திபுரம். |
| மாலை 6.30 மணி | மேட்டுப்பாளையம் | அபிராமி தியேட்டர் எதிரில், மேட்டுப்பாளையம். |
| இரவு 7.30 மணி | குன்னூர் | காமராஜர் சிலை அருகில், ஜான்சன்ஸ் ஸ்கொயர், கோத்தகிரி. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை - 18
நாள் : 16.4.2026

கலைஞர் 100 1924 - 2023



### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை ஆதரித்து

# சேப்பாக்கம் 62 வது வட்டத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு!

### மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் எஸ்.எச்.ரஹமத்துல்லா தலைமை!

*சென்னை, ஏப்.17 -*

சேப்பாக்கம் தொகுதி 62 ஆவது வட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பின்படி, பகுதி செயலாளர் எஸ்.மதன் மோகன் ஆலோசனையின் பேரில் சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் எஸ்.எச். ரஹமத்துல்லா தலைமையில் சேப்பாக்கம் பகுதி பொறுப்பாளர் பி.கே. பாபு, வட்டக்கழக செயலாளர் ஜெகதீசன் ஆகியோர் முன்னிலையில் வீடு வீடாகச் சென்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கிரிராஜன், இளையராஜா, சாய்குமார், ஹாசிம், தணிகாசலம், எஸ்கே.ராஜ், முஸ்தாக், அகமது மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

### குறிஞ்சிப்பாடி — புவனகிரி சட்டமன்றத் தொகுதிகளில்

# கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தேர்தல் பிரச்சார கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுகிறார்!

### மாவட்டச் செயலாளர் — அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவர், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் நாளை (18.04.2026 - சனிக்கிழமை) குறிஞ்சிப்பாடி, அண்ணா பேருந்து நிலையம் அருகில் மாலை 04.00 மணிக்கு, குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியின் கழக வெற்றி வேட்பாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களையும், புவனகிரியில் மாலை 05.00 மணிக்கு, புவனகிரி சட்டமன்ற தொகுதியின் கழக வெற்றி வேட்பாளர் துரை கி.சரவணன் அவர்களையும், ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சார கூட்டத்தில் சிறப்புரையாற்ற உள்ளார்.

அதுசமயம் இப்பிரச்சார கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழகத் தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள் (BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர் - கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.